அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 09/2025(I)

எனது இலக்கம் : EST-1/CIRL/03/0001-(I)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07

2026.05.15

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதமச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
பொதுக்கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைத் தலைவர்கள்

**அரசாங்க தாபனங்களில் திண்மக்கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல்**

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2025.04.02 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 09/2025 தொடர்பில் தங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. அச்சுற்றறிக்கையின் 2.1.2 ஆம் உப பிரிவு பின்வரும் பிரகாரம் திருத்தம் செய்யப்படுகின்றது.

2.1.2 (அ) அனைத்து அரசாங்க தாபனங்களிலும் தனி பயன்பாட்டு பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல்களைக்கொள்வனவு செய்தல் மற்றும் பயன்படுத்தல் 2026.05.31 ஆந் திகதி முதல் முற்றாக நிறுத்தப்படல் வேண்டும்.

(ஆ) பின்வரும் வர்த்தமானியின் மூலம் பயன்பாடு தடை செய்யப்பட்டுள்ள தனி பயன்பாட்டு பிளாஸ்டிக் தங்களது தாபனத்திற்குள் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு அனைத்து தாபனத் தலைவர்களும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

i. இலக்கம் 2341/30 இனைக் கொண்ட 2023.07.19 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி

ii. இலக்கம் 2034/37 இனைக் கொண்ட 2017.09.01 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி

03. மேலும், 2025.04.02 ஆந் திகதிய வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 09/2025 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் தொடர்ந்தும் வலுவிலிருக்கும்.

04. இச்சுற்றறிக்கை சுற்றாடல் அமைச்சின் உடன்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/. எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 0112662340
தொலைநகல் : 0112692158
மின்னஞ்சல்முகவரி :ad-1-est@pubad.gov.lk